சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

அசல் வழக்கு எண். ஓ.எஸ். 119/2017

PW - 3

2024 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 09 ம் நாள் திங்கட்கிழமை(1989 ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி) திருமதி.பி.மோகனவள்ளி, பி.ஏ., எம்.எல்., சார்பு நீதிபதி, பொள்ளாச்சி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | பூவேந்திரன் |
| க.பெ. (அ) த.பெ. | வேணுகோபால் |
| வயது | 52 |
| முகவரி | பொள்ளாச்சி |

**முதல் விசாரணை**

நான் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் தற்போது பொள்ளாச்சி நகராட்சியில் மேலாளராக பணியாற்றி வருகிறேன். எனது பணியாளர் அடையாள அட்டையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். அசல் நகலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு நகல் **வாசாஆ 13** ஆக குறியீடு செய்யப்பட்டது. எனக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையில் மரப்பேட்டை வீதியை சேர்ந்த நாகன் மகன் திருமூர்த்தி என்பவர் எங்கள் அலுவலகத்தில் சுகாதார பிரிவில் பணியாற்றி வந்தது சம்பந்தமான கோப்புடன் சாட்சியம் அளிக்குமாறு சொல்லப்பட்டுள்ளது. எங்கள் அலுவலகத்தில் சுகாதார பிரிவு உள்ளது. நகர நல அலுவலர் என்பவர் சுகாதாரபிரிவின் பிரிவு தலைவர் ஆவார். சுகாதார பிரிவில் பணிபுரிபவர்களை

மேற்பார்வையிட சுகாதார ஆய்வாளர் என்ற பொறுப்பு அலுவலர் உள்ளார். என்னிடம் காட்டப்படும் அடையாள அட்டையில் நாகன் மகன் திருமூர்த்தி சி பிரிவில் பணியாற்றியதாக சுகாதார ஆய்வாளரும் நல அதிகாரியும் கையெழுத்து செய்து கொடுக்கப்பட்டுள்ளது. அது எங்கள் அலுவலகத்தில் வழங்கப்பட்டதா என்பது பற்றி தெரியவில்லை. இது சம்பந்தமாக கோப்புகள் எங்கள் அலுவலகத்தில் இல்லை. 16.04.1976 முதல் 1986 ல் இறக்கும்வரை திருமூர்த்தி எங்கள் அலுவலகத்தில் பணிபுரிந்துள்ளார் என்பது பற்றி ஆவணங்களை பரிசீலனை செய்யவேண்டும்.

**சாட்சி கேட்டுக்கொண்டதற்கிணங்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்பட்டது-**

**3 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பட்டது.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி

பொள்ளாச்சி